**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை: - திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2022 - ம் ஆண்டு, நவம்பர் திங்கள், 14 - ம் நாள், திங்கள்கிழமை.

**இடைக்கால மனு எண்.8/2016**

**இன்**

**நிறைவேற்றுகை மனு எண்.10/2000**

**இன்**

**அசல் வழக்கு எண்.175/1981**

**1.** கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகாவில், நெய்யூரில், தென்னிந்திய தேவாலயத்திற்கு சொந்தமான தேவாலயம், நெய்யூர் ஹோம் சர்ச். (தமிழ்நாடு கஸ்பா சபை, ஆலயம்)

**2.** சாமுவேலின் மகன் செல்வ நாயகம். *(Died – L.R. 6th Petitioner)*

**3.** நெய்யூர் ஹோம் சர்ச், கடந்த கால செயலாளர், Y. ஜெபமணி மகன் சிசில்.

**4.** முத்தையா மகன் வில்லியம் டென்னிஸ். *(4th Plaintiff) Died – L.R. Additional 9th Petitioner)*

**5.** அனஸ் சகரியா மகன் சகரியா. *(5th Plaintiff) Died – L.R. 6th Petitioner).*

**6.** நெய்யூர் மற்றும் அஞ்சல் முகவரியில், பால் தெருவில் வசிக்கும், சோபிதராஜ். *(Died –: R / of H9).*

**7.** நெய்யூர், ஹோம் சர்ச், பாராஷோனேஜில் வசிக்கும், நெய்யூர் சர்ச் - ன் போதகர் மற்றும் தலைவர், 75 வயதான, ஆபிரகாம் மகன், மாசில்லாமணி. *(Addl. Decree holder No.6)*

**8.** நெய்யூர், ஹோம் சர்ச், பாராஷோனேஜில் வசிக்கும், புனித நெய்யூரில் வசிக்கும் கிறிஸ்தவர்கள், நெய்யூர் ஹோம் சர்ச் - ன் செயலாளர் 61 வயதான, Dr. D.C. பெர்ரி மகன், பெர்ரி. *(Addl. H.D.7)*

**9.** இரணியல் வில்லேஜில், மருத்துவமனை சாலையில் வசிக்கும், நெய்யூர் ஹோம் சர்ச் - ன் பொருளாளர், 70 வயதான, ஆமோஸ் மகன் டேவிட்சன்.

**10.** கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகாவில், தலக்குளம் வில்லேஜில், நெய்யூர் ஹோம் சர்ச் - ன் கணக்காளர், 75 வயதான, A. ஜோசப் மகன் ஞானசிகாமணி.

........ மனுதாரர்கள் / தீர்ப்பாணை பெற்றவர்

/எதிர்/

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகாவில், தலக்குளம் வில்லேஜில், தலக்குளம் தேசத்தில், வடலிவிளை வீட்டில் வசிக்கும், 64 வயதான வேலு மகன் V. ராமன்.

....... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இந்த மனுவானது, இவ்வழக்கில், இடைக்கால மனுவாக, இடைக்கால மனு எண்.8/2016 நிறைவேற்று மனுதாரரால், இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுவில், மனுதாரர், வழக்கறிஞர் ஆணையரை நியமிக்கக் கோரியும், வழக்கறிஞர் ஆணையர் நிறைவேற்று மனுவினை பார்வையிட்டு, அதற்கு முறையான மதிப்பீடு செய்து, அதற்கான அறிக்கையை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, இந்த நீதிமன்றம், நிறைவேற்று மனு சொத்தில், எதிர்மனுதாரரால் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றங்களான மதிப்பீட்டினை தீர்மானித்து, அந்த முன்னேற்றத்திற்கான தொகையினை, இந்த நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில், தாங்கள் அதை வைப்பீடு செய்ய முன்வருவதாக தெரிவித்து மனு தாக்கல் செய்திருந்தனர்.

இம்மனுவானது, 11.11.2022 அன்று இந்நீதிமன்றம் முன்பாக வந்த போது, மனுதாரர்கள் / தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர். திரு. S. ராஜுலின் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர். திரு. N.S. ஆறுமுகவேல் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், மனுதாரர்கள் / தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில், நீதிமன்ற ஆணையர்

அறிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை, எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில், நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை, ஆகியவற்றை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவாணை

**1.** வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கையில், நிறைவேற்று மனு சொத்திலுள்ள வீடுகள் குணசேகரன் மற்றும் ராமன் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், இந்த நீதிமன்றம், தீர்ப்பாணையை தாண்டி, பிற சட்ட எழுவினாக்களை காண இயலாது என்றும், அவ்வாறு நிறைவேற்று மனு சொத்தில், 3 - ம் நபர்கள் வசிக்கும் உரிமையைக் குறித்து நிறைவேற்று மனு சொத்தைப் பொறுத்து, இந்த நீதிமன்றத்தால் சுவாதீனம் ஒப்படைக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, சுவாதீனம் எடுக்கும் காலக்கட்டத்தில் தங்களது ஆட்சேபனையை தெரிவித்து கொள்ளலாமென, இன்றைய தேதியில், நிறைவேற்று மனு சொத்தினைக் குறித்து, நிறைவேற்று மனுதாரர்/உரிமையாளர் என்கின்ற முறையில், இந்த நீதிமன்றம், நிறைவேற்று மனு நீதிமன்றம் தீர்ப்பாணையை, அதன் நோக்கத்தை தாண்டி செயல்பட இயலாது என்பதால், இந்த நீதிமன்றம், சூழ்நிலையை கருதி வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கையை பரிசீலித்து, தற்போதைய சந்தை மதிப்பில் நிறைவேற்று மனு சொத்தில் காணப்படும் 2 வீடுகளுக்கு நில ஆர்ஜிதர் சட்டத்தில் பிரிவு 28 - ல் தெரிவித்துள்ள விதிமுறைகளை, இந்த நிறைவேற்று மனுவில் தீர்ப்பு கடனாளிக்கு அளிக்க வேண்டிய தொகைக்கு வழிகாட்டியாக பின்பற்றி, வழக்கறிஞர் ஆணையர் தெரிவித்துள்ள ரூ.20,17,748/- தொகையின், இரண்டு மடங்கான ரூ.40,35,496/- தொகையென தீர்மானித்து உத்தரவிடப்படுகிறது.

**2.** ரூ.40,35,496/- தொகையினை, நிறைவேற்று மனுதாரர் 15 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

**3.** நிறைவேற்று மனுவின் இறுதி உத்தரவு, நிறைவேற்று மனுவில், நீதிமன்றம் ஆணையிட்டுள்ள மேற்சொன்ன தொகையை, இந்த நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த பிறகு, பிறப்பிக்கப்படுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவாணை 2022 - ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 - ம் நாளாகிய இன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையும் பதியப்பட்டது.

ஒம்/-
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

## Schedule of Property

| | | |
|---|---|---|
| District | : | Kanyakumari |
| Sub-District | : | Eraniel |
| Taluk | : | Kalkulam |
| Village | : | Thalakulam |
| Desom | : | Thalakulam |
| Kannaru | : | 5 |
| Lekkom | : | 54, 55 |
| Tenure | : | Kazhukoorakaranmai Jenmom |
| Sy. No. | : | 9803 |
| Extent | : | 7 acres 85 cents |

## Description of Property :

The plot of land measuring 20 cents described as plot E in the final decree plan attached to the decree in O.S.No.11/1104 M.E. of Sub Court, Nagercoil, now of Padmanabhapuram.

### Boundaries :

| | | |
|---|---|---|
| East | : | Sy. No.9804 (and Road) |
| South | : | F Plot |
| West | : | Sy. No.9946 |
| North | : | D Plot |

ஒம்/- ஒம்/- ஒம்/-
D.C H.C D.M.

**<u>உத்தரவாணை</u>**

இ.ம.எண்.8/2016

இன்

நி.ம.எண்.10/2000

இன்

அசல் வழக்கு எண்.175/1981

மா.உ.நீ., இரணியல்

தேதி 14.11.2022